**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 496/2021**
**வழக்கு சாட்சி PW–10**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மருத்துவர்.திரு.பாபு | தாலுகா | : | தென்காசி |
| தந்தை பெயர் | : | முத்துச்சாமி | தொழில் | : | மருத்துவர் |
| கிராமம் | : | தென்காசி | வயது | : | 49 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of July 17th, 2025.

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் தற்போது அரசு தலைமை மருத்துவமனை தென்காசியில் குடிமை மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். 12.05.2013 ம் தேதியன்று நான் பணியில் இருந்தபோது, விஸ்வநாதன் என்ற 35 வயது மதிக்கத்தக்க ஒருவரை அதே நாள் மதியம் 02.10 மணி அளவில் அவர் உடம்பில் ஏற்பட்ட காயங்களுக்காக மருத்துவ பரிசோதனை செய்தேன். அப்போது, அவர் தன்னை அடையாளம் தெரிந்த 20 நபர்கள் அதே நாள் மதியம் 01.40 மணியளவில் ஆய்க்குடி காளியம்மன் கோவில் அருகே வைத்து தாக்கியதாக தெரிவித்தார். அவரை பரிசோதித்தபோது கீழ்க்கண்ட காயங்கள் காணப்பட்டது.

(1). தலையின் பின்புறத்தில் 4 x 3 x1 செ.மீ அளவில் ஒரு சிதைந்த காயம் காணப்பட்டது. அவரை உள்நோயாளியாக அனுமதித்து, சிகிச்சையின் முடிவில் அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என சான்று வழங்கினேன். அந்த விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று **அ.சா.ஆ.3** ஆகும்.

அதே நாள் மதியம் 02.15 மணியளவில் முருகையா என்ற 34 வயது மதிக்கத்தக்கவரை அதே சம்பவத்தில் காயம் பட்டதாக கூறியவரை பரிசோதித்த போது,

(1). அவர் தலையின் மத்தியில் 10 x 2 x1 செ.மீ அளவில் ஒரு வெட்டுக்காயம் காணப்பட்டது. அவரை உள்நோயாளியாக அனுமதித்து, சிகிச்சையின் முடிவில் அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என சான்று வழங்கினேன். அந்த விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று **அ.சா.ஆ.4** ஆகும்.

அதே நாள் மதியம் 02.45 மணியளவில் முருகதாஸ் என்ற 38 வயது மதிக்கத்தக்கவரை அதே சம்பவத்தில் காயம் பட்டதாக கூறியவரை பரிசோதித்த போது,

(1). அவர் உதட்டின் மேல்பகுதியில் 3x 2 x1 செ.மீ அளவில் ஒரு வெட்டுக்காயம் காணப்பட்டது.

(2). அவர் வலதுபக்க தாடையில் 6x6 செ.மீ அளவில் ஒரு இரத்தம் கன்றிய காயம் காணப்பட்டது.

அவரை உள்நோயாளியாக அனுமதித்து, சிகிச்சையின் முடிவில் அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என சான்று வழங்கினேன். அந்த விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று **அ.சா.ஆ.5** ஆகும்.

அதே நாள் மதியம் 02.55 மணியளவில் கிருஷ்ணன் என்ற 33 வயது மதிக்கத்தக்கவரை அதே சம்பவத்தில் காயம் பட்டதாக கூறியவரை பரிசோதித்த போது,

(1). அவரின் வலது கை மணிக்கட்டில் 6x6 செ.மீ அளவில் ஒரு இரத்தம் கன்றிய காயம் காணப்பட்டது.

(2). அவரது வலது பக்க கீழ் உதட்டில்  2x2 செ.மீ அளவில் ஒரு இரத்தம் கன்றிய  காயம் காணப்பட்டது.

அவரை உள்நோயாளியாக அனுமதித்து, சிகிச்சையின் முடிவில் அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என சான்று வழங்கினேன். அந்த விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று **அ.சா.ஆ.6** ஆகும்.

அதே நாள் மதியம் 03.00 மணியளவில் சுந்தரி என்ற 35 வயது மதிக்கத்தக்கவரை அதே சம்பவத்தில் காயம் பட்டதாக கூறியவரை பரிசோதித்த போது,

(1). அவரது இடதுபக்க கண் இமைக்கு மேல் 2 x1 செ.மீ அளவில் ஒரு வெட்டுக்காயம் காணப்பட்டது.

(2). அவரின் இடது கண் புருவத்தில் 4x4 செ.மீ அளவில் ஒரு இரத்தம் கன்றிய  காயம் காணப்பட்டது.

(3). மேலும், அவரின் தலையில் வலி இருப்பதாக கூறினார்.

அவரை உள்நோயாளியாக சிகிச்சை அளித்து முடிவில் அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என சான்று வழங்கினேன். அந்த விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று **அ.சா.ஆ.7** ஆகும்.

அதே நாள் இரவு 03.10 மணியளவில் பாலமுருகன் என்ற 28 வயது மதிக்கத்தக்கவரை அதே சம்பவத்தில் காயம் பட்டதாக கூறியவரை பரிசோதித்த போது,

(1). அவரது வலது பக்க தலைப்பகுதியில் 2 x1 செ.மீ அளவில் ஒரு வெட்டுக்காயம் காணப்பட்டது.

அவரை வெளிநோயாளியாக சிகிச்சை அளித்து முடிவில் அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என சான்று வழங்கினேன். அந்த விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று **அ.சா.ஆ.8** ஆகும்.

அதே நாள் இரவு 03.10 மணியளவில் பாலமுருகன் என்ற 28 வயது மதிக்கத்தக்கவரை அதே சம்பவத்தில் காயம் பட்டதாக கூறியவரை பரிசோதித்த போது,

(1). அவரது வலது பக்க தலைப்பகுதியில் 2 x1 செ.மீ அளவில் ஒரு வெட்டுக்காயம் காணப்பட்டது.

அவரை வெளிநோயாளியாக சிகிச்சை அளித்து முடிவில் அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என சான்று வழங்கினேன். அந்த விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று **அ.சா.ஆ.8** ஆகும்.

அதே நாள் இரவு 09.50 மணியளவில் வெங்கலமுத்து என்ற 43 வயது மதிக்கத்தக்கவரை அதே சம்பவத்தில் காயம் பட்டதாக கூறியவரை பரிசோதித்த போது,

(1). அவரது இடது கை மணிக்கட்டு பகுதியில் 3 x 2 செ.மீ அளவில் இரத்தம் கன்றிய காயம் காணப்பட்டது.

(2). தலையின் நடுப்பகுதியில் 3 x 3 செ.மீ அளவில் வெட்டுக்காயம் காயம் காணப்பட்டது.

(3) வலது பக்க நெஞ்சு பகுதியில் வலி இருப்பதாக கூறினார்.

அவரை உள்நோயாளியாக சிகிச்சை அளித்து முடிவில் அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என சான்று வழங்கினேன். அந்த விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று **அ.சா.ஆ.9** ஆகும்.

காயம்பட்டவர்களுக்கு ஏற்பட்ட காயங்கள் அவர்கள் சொன்ன நேரத்தில், சொன்ன முறையிலும், சொன்ன ஆயுதங்களால் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான்.

<u>**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**</u> –

நான் ஆயுதங்கள் எதையும் பார்க்கவில்லை. விஸ்வநாதன் என்னிடம் எந்த ஆயுதத்தினால் அவர் தாக்கப்பட்டார் என்று கூறவில்லை என்றால் சரிதான். முருகையா கல்லால் தாக்கப்பட்டதாக கூறவில்லை என்றால் சரியல்ல. செங்கலால் தாக்கப்பட்டதாக கூறியுள்ளார். 20 நபர்கள் ஒரு நபரை தாக்கும் போது ஒரு நபருக்கு உடலின் பல பகுதிகளில் காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான். காயம்பட்ட நபர்களுக்கு ஏற்பட்ட காயங்கள் மக்கள் கூட்ட நெரிசலில் சிதறி ஓடும் போது ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான்.

<u>**மறுவிசாரணை**</u> –

இல்லை.

J CHRISTAL BABITHA
Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.07.18 18:49:37 +0530

**<u>வாக்குமூலம்</u>**
**<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>**
**<u>வழக்கு எண் : SC.No.496/2021</u>**
**<u>வழக்கு சாட்சி PW–11</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முருகன் | தாலுகா | : | வீ.கே.புதூர் |
| தந்தை பெயர் | : | வைரவன் | தொழில் | : | கூலி |
| கிராமம் | : | ராஜகோபாலப்பேரி | வயது | : | 43 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of July 17th, 2025.

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் ராஜகோபாலப்பேரியில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜர்கள் மற்றும் அத்தாட்சிகளில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான். போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் இந்த கையெழுத்துக்களை போட்டு கொடுத்தேன். அந்த கையெழுத்துக்களை எதற்காக போட்டுக்கொடுத்தேன் என்று எனக்கு தெரியாது. அந்த கையெழுத்துகள் முறையே அ.சா.ஆ.10, அ.சா.ஆ.11, அ.சா.ஆ.12, அ.சா.ஆ.13. இந்த வழக்கு சம்பந்தமாக எதுவும் எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் குறுக்கு விசாரணை –**

நான் போலீஸ் விசாரணையில் கடந்த 12.05.2013ம் தேதி மாலை 04.45 மணியளவில் வழக்கின் முதல் சம்பவயிடத்தை காவல் ஆய்வாளர் பார்வையிட்டு பார்வை மகஜர்கள் மற்றும் வரைபடம் தயார் செய்தார்கள்

என்றும், அதில் நானும், சாட்சி முனியசாமி என்பவரும் சாட்சிகளாக கையெழுத்துக்கள் போட்டோம் என்றும், அத்தாட்சி மூலம் சம்பவயிடத்தில் கிடந்த 5 சிறிய கற்கள், 5 செங்கல் துண்டுகள், 2 கம்புகள் ஆகியவற்றை கைப்பற்றினார்கள் என்றும்,

கடந்த 12.05.2013 ம் தேதி மாலை 05.45 மணியளவில் வழக்கின் இரண்டாம் சம்பவயிடத்தை காவல் ஆய்வாளர் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தார்கள் என்றும், அதில் நானும், சாட்சி முனியசாமி என்பவரும் சாட்சிகளாக கையெழுத்துக்கள் போட்டோம் என்றும், அத்தாட்சி மூலம் சம்பவயிடத்தில் கிடந்த தீயில் எரிந்தும், எரியாத நிலையிலுள்ள தென்னங்கீற்று ஒன்றையும், கண்ணாடி பாட்டில் ஒன்றையும், TN–72–U–7138 பதிவெண் கொண்ட இருசக்கரவாகனத்தினையும் கைப்பற்றினார்கள் என்றும், விசாரணையில் கூறிவிட்டு, தற்போது எதிரிக்கு பயந்து அவருக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.07.18 18:49:44 +0530